# திருக்குறள்

11. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

12. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

13. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

14. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

15. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

16. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

17. செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் ளெல்லாந் தலை.

18. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

19. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

20. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.